அசல் வழக்கு எண். 262/2019 தேதி 01-04-2024

வா.சா.1- மாறன்

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

எனது சகோதரிகள் பிரதிவாதி ஜோதிலெட்சுமி மற்றும் செல்லம்மாள் ஆகியோருக்கு சீர்வரிசை செய்து திருமணம் முடித்து வைத்தாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வீட்டுமனை 2 செண்டிற்காக தாவா வழக்கு தாக்கல் செய்துள்ளேன். பிராது சொத்து விவரத்தில் சொல்லியுள்ள நான்கெல்லை விவரம் தவறானது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 வீட்டு வரி இரசீது வழக்கு சொத்திற்கானது இல்லை என்றால் சரியல்ல. பிராது வரைபடம் தவறானது என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் நான் எந்த காலத்திலும் வீடு கட்டி குடியிருந்து வரவில்லைஎன்றால் சரியல்ல. வழக்கு சொத்திற்கு அருகில் என் சகோதரர்கள் குடியிருக்க வில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தில் பிரதிவாதிக்கு சொந்தமானது என்றும், தாவாசொத்தில் பிரதிவாதி குடியிருந்து வருகிறார் என்றால் சரியல்ல. பிரதிவாதி ஜோதிலெட்சுமிக்கு எனது தகப்பனார் எழுதி கொடுத்த தானசெட்டில்மெண்ட் ஆவணம் சட்டப்படி செல்லக்கூடியது என்றால் சரியல்ல. தாவா வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-P.பாலமுருகன்

**Additional District Munsif,**
**Kulithalai.**